# கணக்கீடு

## இலங்கை கணக்கீட்டு நியமம்



The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

## தேர்ச்சி: 11.7

### இலங்கை கணக்கீட்டு நியமம் - 17


**குத்தகை**

குறிப்பிட்ட சொத்தினைப் பயன்படுத்தும் உரிமையினை குத்தகை வழங்குனரினால் குத்தகை கொள்வனவாளருக்கு வழங்குவது தொடர்பான ஓர் உடன்படிக்கையே குத்தகை ஆகும்.

அதாவது சொத்து அல்லது சொத்து தொகுதியொன்றை குறிப்பிட்ட காலம் வரை பயன்படுத்துவதற்கான உரிமையை உடன்பாட்டின் அடிப்படையில் பெற்றுக்கொள்வதனை குத்தகை என்பர்

**குத்தகை வகைகள்**

1. நிதிக்குத்தகை
2. செயற்பாட்டுக்குத்தகை




தொகுப்பு : திரு.சி.தவராஜா (கணக்கீடு, ஆசிரியர், யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த.தொ.தொ, ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## நிதிக் குத்தகை

குத்தகை ஆதனம் தொடர்பான இழப்புக்கள் (இடர்) மற்றும் பிரதி பலன்கள் (அனுகூலங்கள்) குத்தகை விற்பனையாளரிடமிருந்து குத்தகை கொள்வனவாளருக்கு மாற்றப்படுகின்ற உடன்பாடு நிதிக்குத்தகை ஆகும். குத்தகை ஆதனத்தின் கட்டுப்பாட்டினை குத்தகையாளன் கொண்டிருப்பார்

## செயற்பாட்டுக் குத்தகை

நிதிக்குத்தகை உடன்படிக்கை தவிர்ந்த ஏனைய குத்தகை உடன்படிக்கைகள் யாவும் செயற்பாட்டுக் குத்தகையாகும். குத்தகை ஆதனத்திற்குரிய இடர்களையும் பயன்களையும் போதியளவு குத்தகையாளருக்கு கைமாற்றம் செய்யப்படாத குத்தகை செயற்பாட்டுக் குத்தகையாகும். இம்முறையான குத்தகை ஒரு வாடகை ஒப்பந்தம் போன்றது

தொகுப்பு : திரு.சி.தவராஜா (கணக்கீடு, ஆசிரியர், யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த.தொ.தொ, ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## நாட்குறிப்புப் பதிவுகள்

**01**

**குத்தகை ஆதனத்தை பெற்றுக்கொள்ளும் போது**

குத்தகை ஆதனக் கணக்கு வரவு
குத்தகை வழங்குனர் கணக்கு செலவு

**02**

**குத்தகைக்கான ஆரம்பக் கொடுப்பனவுக்கான பதிவு**

குத்தகை வழங்குனர் கணக்கு வரவு
காசுக் கணக்கு செலவு

**03**

**குத்தகை வட்டிச் செலவுக்கா பதிவு**

குத்தகை வட்டிக் கணக்கு வரவு
குத்தகை வழங்குனர் கணக்கு செலவு

**04**

**குத்தகைக்கான தவணைப்பணம் செலுத்துவதற்கான பதிவு**

குத்தகை வழங்குனர் கணக்கு வரவு
காசுக் கணக்கு செலவு

தொகுப்பு : திரு.சி.தவராஜா (கணக்கீடு, ஆசிரியர், யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த.தொ.தொ, ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

01 இங்கு குத்தகை வட்டிச் செலவு நிதிச் செலவில் காட்டப்படும்

02 குத்தகை வழங்குனர் தொகையில் அடுத்த ஆண்டுக்காக செலுத்த வேண்டிய தொகை நடைமுறைப் பொறுப்பாக காட்டப்படும்

03 குத்தகை வழங்குனர் தொகையில் அடுத்த ஆண்டு செலுத்த வேண்டிய தொகை தவிர அதற்குப் பின்னர் செலுத்த வேண்டிய தொகை நடைமுறையல்லாத பொறுப்பாக காட்டப்படும்

**குத்தகை உடன்பாட்டை நிதிக்குத்தகையாக இனம் காண்பதற்காக இருக்க வேண்டிய அம்சங்கள்**

- குத்தகை கால முடிவில் சொத்தின் உடைமை குத்தகைக்கு எடுத்தவருக்கு உரிமை மாற்றப்படும்
- நியாயமான விலையில் சொத்து கொள்வனவு செய்யக்கூடிய வாய்ப்பு இருத்தல்
- குத்தகையானது சொத்தின் பொருளாதார பயன்பாட்டுக் காலத்தின் பெரும் பகுதியாக இருத்தல்
- குத்தகை கொடுப்பனவுக்கான நிகழ்காலப் பெறுமதியானது குத்தகை ஆதனத்தின் நியாயப் பெறுமதிக்கு ஏறக்குறைய சமமானதாக அல்லது கூடுதலாக இருக்க வேண்டும்
- குத்தகை கொள்வனவாளர் குத்தகை ஆதனத்தின் ஆயுள் காலத்தில் பெரும் பகுதியை பயன்படுத்தி கொள்ள முடியும்

தொகுப்பு : திரு.சி.தவராஜா (கணக்கீடு, ஆசிரியர், யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த.தொ.தொ, ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**01)**

31.03.2017 இல் பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மோட்டார் வாகனம் (01.04.2016 இல் நிதிக்குத்தகையின் கீழ் பெறப்பட்டது) | 8000 | |
| குத்தகை வட்டி | 1920 | |
| குத்தகை கடன்கொடுத்தோர் | | 6080 |

மோட்டார் வாகனம் 01.04.2016 இல் 04 வருட நிதிக்குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டது. இச் சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் 06 வருடங்களாகும். சொத்தின் உரிமையானது நிதிக்குத்தகையின் இறுதியில் குத்தகை எடுத்தோருக்கு வழங்கப்படுவதில்லை. இக்குத்தகை உடன்படிக்கையின் கீழ் ஆரம்பக்கொடுப்பனவு ரூபா 1920 000 செலுத்தப்படல் வேண்டும். மேலும் வருடாந்த குத்தகை தவணைக்கட்டணம் ரூபா. 1920 000 ஐ 31.03.2017 இலிருந்து ஒவ்வொரு வருட முடிவிலும் செலுத்துதல் வேண்டும். 04 வருடங்களுக்குமான குத்தகை வட்டி பின்வருமாறு

| வருடம் | வட்டி (ரூபா 000) |
|---|---|
| 2016/2017 | 608 |
| 2017/2018 | 476 |
| 2018/2019 | 332 |
| 2019/2020 | 184 |

ஆரம்பக் குத்தகைப் பொறுப்பும் ஆரம்பக் கொடுப்பனவும் சரியாகப் பதியப்பட்டுள்ளன. மேலும் நடைமுறை ஆண்டிற்கான தவணைக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இது இவ்வருடத்திற்கான குத்தகை வட்டியாகப் பதியப்பட்டுள்ளது.

முடிவுக்கணக்கில் பொருத்தமான இடங்களில் பொருத்தமான பதிவுகளை தெளிவுபடுத்துக.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**02)**

31.03.2017 இல் பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
| --- | --- | --- |
| குத்தகை வட்டி | 720 | |
| குத்தகை கடன் கொடுத்தோர் | | 1788 |
| மோட்டார் வாகனம் (குத்தகை அடிப்படையில்) | 3000 | |
| மோட்டார் பெ. தே. ஏற்பாடு | | 600 |

மோட்டார் வாகனம் 01.04.2015 இல் நிதிக் குத்கையின் கீழ் 04 வருட காலத்திற்கு விநியோக நோக்கத்திற்காக வாங்கப்பட்டது. இக் குத்தகைக்கு செலுத்த வேண்டிய வருடாந்த தவணைக்கட்டணம் ரூபா. 720 000 ஆகும். நடைமுறை வருடத்திற்கான குத்தகை தவணைக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இது குத்தகை வட்டிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதுடன் நடைமுறை வருடத்திற்கும் அடுத்த இரண்டு வருடங்களுக்குமான குத்தகை வட்டி கீழே தரப்பட்டுள்து.

| வருடம் | வட்டி ரூபா (000) |
| --- | --- |
| 2016/2017 | 179 |
| 2017/2018 | 125 |
| 2018/2019 | 68 |

முடிவுக்கணக்குகளில் தொடர்புடைய வெளிப்படுத்தலை மேற்கொள்க?



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**03)**

31.03.2017 இல் பீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| குத்தகை கடன்கொடுத்தோர் | | 2353 |
| மோட்டார் வாகனம் (குத்தகை அடிப்படையில்) | 6000 | |
| மோட்டார் பெ.தே.ஏற்பாடு | | 2400 |

எல்லா மோட்டார் வாகனங்களுக்கும் 01.04.2014 இல் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் இத்தினத்தில் இச் சொத்துக்களின் பயன்தரு ஆயட்காலம் 05 வருடங்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுக்கு நேர் கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு இடப்படுகின்றது. அவற்றின் குத்தகைக் காலம் 05 வருடங்களாகும். வருடாந்த குத்தகைக்கட்டணம் ரூபா. 1583 000 ஆகும்.

நடைமுறையாண்டுக்கான குத்தகைக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இவை முழுமையாக குத்தகை கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.இது தொடர்பில் வேறு எதுவித பதிவும் மேற்கொள்ளப்படவில்லை.

குத்தகை வட்டி பின்வருமாறு

| வருடம் | வட்டி ரூபா (000) |
|---|---|
| 2014/2015 | 600 |
| 2015/2016 | 502 |
| 2016/2017 | 394 |
| 2017/2018 | 275 |
| 2018/2019 | 144 |

முடிவுக்கணக்குகளில் தொடர்பான வெளிப்படுததலை மேற்கொள்க?

தொகுப்பு : திரு.சி.தவராஜா (கணக்கீடு, ஆசிரியர், யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த.தொ.தொ, ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk